**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT**

**MADURAI**

**O.S. NO. 271 /2023 P.W.1**

Name : திருமதி.மின்னல்கொடி Father's Name:

Caste : Religion:

Village : Taluk:

Calling : Age:

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30.06.2025.

**வாதி தரப்பில் முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தகவலின் பேரில் தான் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள சங்கதிகள் எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது. அதில் உள்ள சங்கதிகள் உண்மையானது தான். 16.08.2021 ம் தேதி 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனாருமான அல்லிக்கொடி என்பவர் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஈடுகடன் பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆகும். அதற்கு ஆதரவாக 1ம் பிரதிவாதியின் கணவர் என்னிடம் ரூ.20,00,000/- பெற்றுக்கொண்டார். மேற்படி ஈடுகடன் பத்திரத்தை எழுதிக்கொடுத்த சிறிது நாளில் 1ம் மேற்படி அல்லிக்கொடி இறந்துவிட்டார். அவருடைய சொத்துக்களை பிரதிவாதிகள் அனுபவித்து வருகின்றனர். அதனால் ஈடுகடன் தொகை கேட்டு தொகையை கேட்டு பிரதிவாதிகளுக்கு 21.06.2023 ம் தேதி வழக்கறிஞர் மூலம் பதிவு தபாலில் அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆகும். பிரதிவாதிகளுக்கு மேற்படி அறிவிப்பை பதிவு தபாலில் அனுப்பியதற்கான ரசீதுகள் 4 எண்ணம் தாக்கல் செய்துள்ளேன். அது வா.சா.ஆ.3 வரிசையாக குறியீடு

செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பு முத்துமாயாக்காள், ஜெயவீரனன், சின்னவீரனன் ஆகியோர்கள் விலாசத்தில் சார்வு செய்யப்பட்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் 3 தாக்கல் செய்துள்ளேன். அது வா.சா.ஆ.4 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. தங்கவீரனுக்கு அனுப்பிய அறிவிப்பு அவரால் பெற்றுக்கொள்ளப்படாமல் திருப்பப்படுகிறது. அதற்கான தபால் கவரை தாக்கல் செய்துள்ளேன். அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்புக்கு பிரதிவாதிகள் நால்வரும் வழக்கறிஞர் மூலம் 08.07.2023 ம் தேதி அனுப்பிய பதில் அறிவிப்பை தாக்கல் செய்துள்ளேன். அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

ஆகவே பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

## குறுக்குவிசாரணை

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்குவிசாரணைக்கு காலஅவகாசம் கோரப்பட்டதால் குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- மின்னல்கொடி

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.